சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.109/2021

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | வயது | 72 |
| த/பெ | சுப்பைய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காட்டுர், மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | ஓய்வு பெற்ற ஆசிரியர் |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது அப்பா 1963 ம் ஆண்டு காலமானார். அப்போது எனக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் 6 வயது இருக்கும். எங்கள் குடும்பத்தில் நான் தான் மூத்தவர் என்றால் நான் இரண்டாவது. எனக்கு மூத்த அண்ணன் உள்ளார். நான் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் என்றால் சரி தான். 3ம் பிரதிவாதி பொன்னு சாமி வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து ஓய்வு பெற்று விட்டார். 4ம் பிரதிவாதி கந்தசாமியும் போக்கு வரத்து கழகத்தில் பணி புரிந்து ஓய்வு பெற்று விட்டார் என்றால் சரி தான். எங்கள் குடும்பத்தில் நான், 3 மற்றும் 4 பிரதிவாதிகள் மட்டுமே படித்தவர்கள் என்றால் சரி அல்ல. மற்றவர்களும் 9 வகுப்பு வரை படித்துள்ளார்கள். ஆனால் நாங்கள் மூவரும் மட்டுமே அரசு வேலை பார்த்துள்ளோம். எனது அப்பா இறந்த பின்னர் எனது தாயாரும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மட்டுமே எங்கள் தகப்பனாருக்கு சொந்தமான பூமியை பார்த்து கொண்டார்கள் இல்லை. யார் விவசாயம் செய்தது என்றால் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் செய்தார்கள். என்னுடைய பள்ளி மற்றும் கல்லூரிக்கான செலவுகளை எனது தாயாரும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் செய்தார்கள் என்றால் சரி அல்ல. எனது தாயர் தான் செய்தார். நான் எந்த வருடம் வேலை சென்றேன் என்றால் 22.09.1972 அன்று சேர்ந்தேன். 1972 ம் ஆண்டில்

இருந்து நான் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான விவசாய நிலத்தில் விவசாயம் செய்தது இல்லை என்றால் சரி தான். ஆனால் விவசாயம் செய்வதற்கு உறுதுணையாக இருந்து உள்ளேன். நான் 1972 ம் ஆண்டில் இருந்து மேட்டுப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் எனக்கு திருமணம் ஆன 1985 ம் ஆண்டில் இருந்து குடியிருந்து வருகிறேன். எனக்கு தாவா சொத்துக்கள் எங்கு உள்ளது என்றும் அதன் புல எண்கள் தெரியாது சரி அல்ல. பிராது தபசில் சொத்துக்களின் புல எண்கள் தெரியுமா என்றால் தற்போது சொல்ல முடியாது. ஆனால் சொத்துக்கள் எங்கு உள்ளது என்று தெரியும். எந்தெந்த புல எண்களில் கிணறுகள் உள்ளன என்றும் மின் இணைப்புகள் உள்ளன என்றும் எனக்கு தெரியாது என்றால் தெரியும். ஆனால் புல எண்கள் மட்டும் தெரியாது. மொத்தம் எத்தனை மின் இணைப்புகள் உள்ளன என்றால் தனிப்பட்ட மின் இணைப்புகள் இரண்டும், கூட்டு மின் இணைப்பு ஒன்றும் உள்ளன. பிராதில் எத்தனை சொத்துக்கள் காட்டி உள்ளேன் என்றால் 8 இனங்கள் காட்டி உள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பில் 9 இனங்கள் காட்டி இருந்தேன் என்றால் தவறாக காட்டி இருந்தேன். எனக்கு புல எண்கள் தெரியாததால் அறிவிப்பிலும் பிராதிலும், சொத்து விவரங்களை தவறாக காட்டி உள்ளேன் என்றால் சரி அல்ல. நான் 31.03.2009 அன்று பணி ஓய்வு பெற்றேன். அதன் பின்னரும் மேட்டுப்பாளையம் நகரத்தில் தான் குடியிருக்கிறேன் என்றால் சரி தான். எனது தாயார் 2012 ம் ஆண்டு இறந்தார் என்றால் சரி தான். முதன் முதலாக நான் எப்போது யாரிடம் பாகம் வேண்டும் என்று கேட்டேன் என்றால் 2006 ம் ஆண்டில் எல்லோரிடமும் கேட்டேன். அவ்வாறு நான் கேட்டதற்கு எந்த ஆவணங்களும் இல்லை என்றால் காவல் நிலையத்தில் பஞ்சாயத்து பேசி எழுதி வாங்கப்பட்டது. அதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரி அல்ல. அவ்வாறு ஆதாரம் இருந்தால் அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்து இருப்பேன் என்றால் சரி அல்ல. பிராதில் எனது தாயார் 2012 ம் ஆண்டு இறந்த பின்னர் தான் பாகம் கேட்டதாக கூறி உள்ளேன் என்றால் 2012 லும் கேட்டேன், 2006 லும் கேட்டேன். 2006 ம் ஆண்டில் பாகம் கேட்டதாக என்னுடைய பிராதில் கூறவில்லை என்றால் பல முறை கேட்டதாக கூறியுள்ளேன். பிராது 4 வது இன சொத்து தற்போது வரை 2 வது பிரதிவாதியின் தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரி

அல்ல. கூட்டு அனுபவத்தில் உள்ளது. அந்த சொத்தின் மீது எவ்வளவு வங்கி கடன் மற்றும் மற்ற கடன்கள் உள்ளன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது படிப்பிற்காகவும் வேலை பெறுவதற்காகவும் பிராது 4 வது இன சொத்து அடமானம் வைத்து கடன் பெறப்பட்டது என்றால் சரி அல்ல. இந்த சொத்தின் மீது எவ்வளவு கடன் உள்ளது என்று எனக்கு தெரியாது. என்னுடைய படிப்பு மற்றும் 3 மற்றும் 4 பிரதிவாதிகளின் படிப்புக்காக 2 வது பிரதிவாதி இந்த சொத்தின் மீது கடன் பெற்றுள்ளார் என்றால் சரி அல்ல. பிராது 4 ம் இன சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் 2 ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளன என்றல் சரி தான். 2 ம் பிரதிவாதி தான் எனக்கு படிப்பு செலவுக்கு கொடுத்ததால் எங்கள் அனைவரின் சம்மதத்தின் பேரில் அவர் கடன் பெற்றார் என்றால் சரி அல்ல. அவ்வாறு பெற்ற கடனுக்காக அந்த சொத்து ஏலத்திற்கு வந்தது என்றால் சரி தான். ஏல அறிவிப்பு உள்ளிட்ட ஏல நடவடிக்கை தொடர்பான ஆவணங்கள் 2 ம் பிரதிவாதிக்கு தான் வந்தன என்றால் சரி தான். 2 ம் பிரதிவாதி தான் அந்த கடனை அடைத்தார் என்றால் 2 ம் பிரதிவாதி கொஞ்சம் தொகை செலுத்தி விட்டு நீதி மன்றத்தில் தடை ஆணை பெற்று விட்டார். அதன் பின்னர் அந்த கடன் தற்போது வரை நிலுவையில் உள்ளது. அந்த கடன் நிலுவையில் உள்ளது என்று காட்ட என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரி தான். 2 ம் பிரதிவாதி அந்த கடனை அடைத்து சொத்தை மீட்டு விட்டார் என்றால் சரி அல்ல. எதன் அடிப்படையில் அவ்வாறு கூறுகிறேன் என்றால் அந்த கடனை வழங்கிய கூட்டுறவு வங்கியின் செயலாளர் என்னிடம் கூறினார். பிராது 4 வது இன சொத்து ஏலத்திற்கு வந்து அந்த சொத்தை மீட்பதற்காக 2 ம் பிரதிவாதி தனது மனைவியின் 20 பவுன் நகைகளை விற்றும் அவரது மனைவியின் வழியில் வந்த ஒரு சொத்தை விற்று வந்த ரூபாய் 1 லட்சம் தொகையையும் சேர்த்து கடனை கட்டி முடித்தார் என்றால் சரி அல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டு கோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/- G.Gengaraj

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.